**செய்தி வெளியீடு எண்.549** **நாள் 28–12–2006**

## சுற்றுலா மாதாந்திர நாட்காட்டி வெளியீடு

சுற்றுலா அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும், வேலைவாய்ப்பை பெருக்குவதிலும், மக்களிடையே அன்பையும், சகோதரத்துவத்தை வளர்ப்பதிலும் பெரும்பங்காற்றுகிறது. எனவே, சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர்ந்த இந்த அரசு, இந்த ஆண்டு (2006–2007) ரூ.46.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் விளம்பரத்திற்காக மட்டும் ரூ.12.00 கோடியும், சுற்றுலாப்பகுதியில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ரூ.23.00 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1) சுற்றுலா காவலர்கள்:

தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பு அளிக்கவும் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை போக்கவும் "சுற்றுலா காவலர்களை" ஏற்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்து அதற்கான ஆணையை 17.10.2006 அன்று வெளியிட்டுள்ளது. முதற் கட்டமாக பின்வரும் சுற்றுலாத்தலங்களில் சுற்றுலா (TOURISM POLICE) காவலர்கள் நியமிக்கப்படுவார்கள்.

(1) மாமல்லபுரம்
(2) உதகமண்டலம்
(3) கொடைக்கானல்
(4) மதுரை
(5) கன்னியாகுமரி

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் ஒரு புறக்காவல் நிலையம் ஏற்படுத்தப்படும். அதில் ஒரு தலைமைக் காவலரும் மற்றும் ஐந்து காவலர்களும் நியமிக்கப்படுவார்கள்.

### 2) வழிகாட்டிகள் நியமனம்:

சுற்றுலாப்பயணிகளுக்கு, சரியான தகவல்களை அளிக்கவும், அவர்களுக்கு உரிய வழிகாட்டவும் முதற்கட்டமாக 400 வழிகாட்டிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு உரிய ஆணையை 5–9–2006 அன்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. இந்த வழிகாட்டிகள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்படுவார்கள்.

| | |
|---|---|
| சென்னை | தஞ்சாவூர் |
| மாமல்லபுரம் | மதுரை |
| காஞ்சிபுரம் | இராமேஸ்வரம் |
| திருச்சிராப்பள்ளி | கன்னியாகுமரி |
| கொடைக்கானல் | உதகமண்டலம் |

ஆர்வமுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளன. அண்ணா மேலாண்மை பயிற்சி மையம் மூலமாக இந்த சுற்றுலா வழிகாட்டி பயிற்சி நடத்தப்பெறவுள்ளது.

**3) உள்நாட்டு சுற்றுலாப்பயணிகள் வருகையை அதிகரிக்க எடுத்த நடவடிக்கைகள்:**

தமிழ்நாட்டிற்கு வரும் உள்நாட்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க தமிழ்நாடு சுற்றுலாத்துறை கடந்த ஆறு மாதங்களில் மும்பை, அகமதாபாத், கொல்கத்தா, ஹைதராபாத் மற்றும் ஜெய்ப்பூர் போன்ற இடங்களில் விளம்பர முகாம்களை நடத்தியுள்ளது.

மேலும் இரயில்வே நிர்வாகமும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து "RAIL CUM ROAD TOUR" டில்லி, மும்பை, அகமதாபாத், ஹைதராபாத், ஜெய்ப்பூர் ஆகிய இடங்களிலிருந்து நடத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, சுற்றுலாப்பயணிகள் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் வரையில் இரயிலில் அழைத்து வரப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாப்பகுதிகளுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சொகுசுப் பேருந்தின் மூலம் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இத்திட்டத்தைப் பற்றி வெளி மாநிலங்களில் செய்த விளம்பரத்தினால், பயன்படுத்தியோரின் எண்ணிக்கை கடந்த ஆண்டோடு இந்த ஆண்டு அதிகரித்துள்ளது.

சுற்றுலாத்துறையில் இடையறாத விளம்பர முயற்சிகளால், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், டிசம்பர் **2006** வரை சுற்றுலாப்பயணிகளுக்கு முன்பதிவு செய்து முடித்துள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு தோராயமாக ரூ.**85.02** இலட்சம் கிடைத்துள்ளது. **2005–2006** ஆம் ஆண்டில் ரூ.**32.38** இலட்சம் மட்டுமே இந்த சுற்றுலாக்களின் மூலமாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

வடமாநிலங்களில் இருந்து வரும் சுற்றுலாப்பயணிகளின் நன்மையைக் கருதி தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாப்பகுதிகள் பற்றிய ஒருங்கிணைந்த கையேடு ஹிந்தியில் வெளியிடப்பட்டுள்ளது. வடமாநிலங்களில் இருந்து வரும் சுற்றுலாப்பயணிகளில் மதுரை, இராமேசுவரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்கு விரும்பி அதிக எண்ணிக்கையில் செல்கின்றனர். எனவே, அந்த இடங்களைப் பற்றி தனித்தனியாக சிறப்பு கையேடு ஹிந்தியில் முதன்முறையாக வெளியிடப்பட்டுள்ளன.

**4) சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரிப்பு**

சுற்றுலாத்துறை எடுத்த விளம்பர முயற்சிகள் காரணமாக, தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்துள்ள உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2,85,94,592 லிருந்து (2005ல்) 3,46,61,821 (நவம்பர் 2006 வரை) ஆக அதிகரித்துள்ளது. இதே போல் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 9,66,159 லிருந்து (2005ல்) 10,78,000 (நவம்பர் 2006 வரை) அதிகரித்துள்ளது.

**5) அதிக பிரபலமடையாத சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு:**

அதிக பிரபலமடையாத சுற்றுலாத்தலங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2006–2007ம் ஆண்டில் சுற்றுலாத்தலங்களை மேம்படுத்த எடுத்துக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| ஏலகிரி மலை (வேலூார் மாவட்டம்) | – | ரூ. 100.00 இலட்சம் |
| புளியஞ்சோலை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) | – | ரூ. 98.00 இலட்சம் |

**6) பிரபலமான சுற்றுலாப் பகுதிகளை மேம்படுத்தல்:**

அதிக பிரபலமான சுற்றுலாப்பகுதிகளில் (Major Destinations) உலகத்தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நோக்கோடு 2006–2007–ம் ஆண்டில் தஞ்சாவூர் (ரூ.427.46 இலட்சம்), கன்னியாகுமரி (ரூ.258.52 இலட்சம்) மற்றும் மதுரை (ரூ.478.03 இலட்சம்) ஆகிய இடங்களுக்கு நிதியுதவி வழங்கப்படும். இத்திட்டங்கள் மைய அரசின் நிதி உதவியோடு செயல்படுத்தப்படும்.

**7) நாட்காட்டி:**

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களை விளம்பரப்படுத்தும் நோக்கோடு சுற்றுலாத்துறை மாத நாட்காட்டி ஒன்றினை இன்று வெளியிடுகிறது. இந்த நாட்காட்டிகள், வெளிநாட்டில் உள்ள இந்திய சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் பிற மாநிலங்களில் உள்ள சுற்றுலா அலுவலகங்கள் மூலம் சுற்றுலா பயண முகவர்கள், சுற்றுலா நடத்துநர்கள், பயண எழுத்தர்கள், ஓட்டல் நடத்துநர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படும்.

**8) புராதனச்சின்னங்கள்ப் பற்றிய கையேடு (Coffee Table Book)**

இந்தியாவில் 26 உலகப்பாரம்பரிய சின்னங்கள் உள்ளன. அவற்றில் தமிழ்நாட்டில் மட்டும் ஐந்து உலகப்பாரம்பரிய சின்னங்கள் உள்ளன. எனவே, தமிழ்நாட்டில் உள்ள பாரம்பரிய புராதன சின்னங்களின் முக்கியத்துவத்தை குறிக்கும் வகையில் உடனறி வண்ணப்படக் கையேடு (Coffee Table Book) எனப்படும் புகைப்படப் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவைகள் சுற்றுலா முகவர்களுக்கும், பயண எழுத்தர்களுக்கும் அனுப்பப்படும்.

1) நீலகிரி மலை ரயில்
2) பல்லவர்களின் புராதன சின்னங்கள்
3) தஞ்சாவூர், கங்கைகொண்டசோழபுரம், தாராசுரம் ஆகிய இடங்களில் உள்ள சோழர்களின் கோயில்கள்

**9) மாமல்லபுரம் நாட்டிய விழா 2007**

தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கோடும், அவர்கள் தங்கும் நாட்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கோடும், தமிழ்நாடு சுற்றுலாத்துறை பல்வேறு விழாக்களை நடத்தி வருகிறது. அதில் மிக முக்கியமானது மாமல்லபுரம் நாட்டிய விழாவாகும். ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர்–ஜனவரி மாதத்தில் மாமல்லபுரத்தில் நாட்டியவிழாவினை சுற்றுலாத்துறை நடத்தி வருகிறது. இந்த ஆண்டு நாட்டிய விழாவினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை

அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் **29.12.2006** அன்று மாலை **6.00** மணியளவில் மாமல்லபுரம் அர்ச்சுணன் தபசு அருகில் தொடங்கிவைக்கிறார். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. என். சுரேஷ்ராஜன் அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கவும், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி அவர்கள் கைவினைப் பொருட்கள் கண்காட்சியைத் தொடங்கிவைத்தும், மாண்புமிகு தொழிலாளர் நலம் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் சிறப்புரையாற்றவும் உள்ளார்கள்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9